AIA நிறுவனத்தால் 2021 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு காப்புறுதிக்காகவும் ரூ.100 இனை இலங்கை புற்று நோயாளர்கள் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க வாக்குறுதியளிக்கின்றோம்.

# AIA EDUCATION PLAN

## உங்கள் பிள்ளையை வளர்ச்சியில் உச்சத்திற்கு இட்டுச் செல்லும் கல்வித்திட்டம்



AIA இன்ஷூவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES



தற்போதைய போட்டி நிறைந்த உலகில் அனைத்தும் கல்வியினாலேயே முடிவாகிறது. உயர்தரத்தைப் பூர்த்தி செய்யும் மாணவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களே உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், உள்நாட்டு தனியார் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கு சில மில்லியன்கள் செலவாகிறது. வாழ்க்கைச் செலவைத் தவிர்த்த பின், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலுவதற்கு மேலும் பல மில்லியன்கள் செலவிட வேண்டியுள்ளது.

தற்போது காணப்படும் கூடியளவிலான கடன் வட்டி வீதத்திற்கு அமைய கடன் தொகை ஒன்றைப் பெற்று உங்கள் பிள்ளையின் கல்வியை நிறைவேற்ற முயன்றால் 5 வருட காலத்தில் கடன் தொகையை போன்று மற்றுமொரு மடங்கை மீண்டும் செலுத்த வேண்டி உங்களுக்கு நேரிடும். இதன்மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார சிக்கல் உங்களையும், உங்கள் குடும்பத்தின் மன அமைதியையும் பாதிக்க நேரிடும். எதிர்பாராத நிலைகள் காரணமாக வங்கிக் கணக்கு ஒன்றில் மேற்கொள்ளப்படும் சேமிப்புக்கள் நிலையற்ற தன்மையைக்கூட பெற முடியும்.

ஆனால், உங்களது பிள்ளையின் உயர்கல்விக்கு நிதியை திரட்டக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட ஆயுள் காப்புறுதி திட்டம் ஒன்று உங்களிடம் இருக்குமாயின் நிலைமை எவ்வாறு இருக்கும்? ஆம். இப்போது AIA EducationPlan உடன் உங்களது பிள்ளைக்கு சிறந்ததொரு எதிர்காலத்திற்கான வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன.

# இது உங்களுக்கு மிகப் பொருத்தமான காப்புறுதித் திட்டமா?

- உங்களது பிள்ளைக்கு சர்வதேச மட்டத்திலான கல்வியைப் பெற்றுக் கொடுக்க உங்களுக்கு அவசியமா?
- நீங்கள் இல்லாவிட்டாலும் உங்களது பிள்ளை சர்வதேச மட்டத்திலான கல்வியைப் பெற்றுக்கொள்வது உங்களுக்கு அவசியமா?
- நீங்கள் இல்லாவிட்டாலும் உங்கள் குடும்பத்தின் வாழ்க்கை தரத்தினை பாதுகாக்க விரும்புகின்றீர்களா?
- நீங்கள் ஆரோக்கிய மற்றும் ஏனைய பாதுகாப்பு அனுகூலங்களை பெற விரும்புகின்றீர்களா?

# AIA EducationPlan மூலம் உங்களுக்கு வழங்கப்படும் அனுகூலங்கள் என்ன?

## நீங்கள் இல்லாவிட்டாலும் உங்களது பிள்ளைக்கு கிடைக்கும் கல்வி நிதியம்

இத் திட்டத்தின் கீழ் காப்புறுதிக் காலப்பகுதிக்குள் நீங்கள் இறந்து விட்டாலோ அல்லது முழுமையான செயலிழந்த நிலைக்கு தள்ளப்பட்டாலோ உங்களுக்காக உங்களது கட்டுப்பணங்களை நாம் மேற்கொள்வோம். அதன்மூலம் நீங்கள் உயிருடன் இல்லாவிட்டால்கூட நீங்கள் திட்டமிட்டபடி கல்வி நிதியம் உங்களது பிள்ளையிடம் சென்றடையும்.

## நீங்கள் இல்லாவிட்டாலும் உங்களது குடும்பத்தின் வாழ்க்கைத்தரம் பாதுகாக்கப்படும்

இத் திட்டத்தின் கீழ் காப்புறுதிக் காலப்பகுதிக்குள் நீங்கள் உயிரிழந்தால்கூட உங்களது அன்புக்குரியோருக்கு தனது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல ஒரே தடவையில் பெரியதொரு தொகை வழங்கப்படும்.

## உங்களது பிள்ளைக்கு அவரது/அவளது கனவை நனவாக்கிக்கொள்ள ஒரு நிதியம்

எமது விசேட பங்கிலாப முறைக்கு அமைய உங்களது நிதியம் தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் என்பதுடன் முதிர்ச்சியின் போது குறிப்பிடத்தக்க ஒரு கல்வி நிதியம் கிடைக்கும் என்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## உங்களுக்கு பொருந்தும் ஆயுள் காப்புறுதி

உங்களின் தேவைக்கு ஏற்ப சீரமைக்கக்கூடிய ஆயுள் காப்புறுதியை EducationPlan உங்களுக்கு வழங்குகிறது.

## Loyalty வெகுமதி

உங்களது 10 வது காப்புறுதி வருடப் பூர்த்தியின் போது, உங்களின் வருடாந்த அடிப்படைக் கட்டுப்பணத்தைப் போன்ற 400% வரையிலான Loyalty வெகுமதித் தொகைக்குத் தகுதி பெறுவீர்கள். இதற்கு அனைத்துக் கட்டுப்பணங்களும், அந்தந்த உரிய கட்டுப்பணத் திகதியிலிருந்து 180 நாட்களினுள் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

Loyalty வெகுமதிகளானது நீங்கள் தெரிவு செய்கின்ற கட்டுப்பணச் செலுத்தல் முறையின் அடிப்படையிலேயே வேறுபடும். உதாரணமாக: அரையாண்டாக, காலாண்டாக அல்லது மாதாந்தமாக.

# உங்களது நிதியம் எவ்வாறு வளர்ச்சியடைகிறது?

AIA EducationPlan கல்வித் திட்டம் விசேட இலாபப் பங்கு முறையொன்றுடன் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அதன் மூலம் ஒவ்வொரு வருடமும் அறிவிக்கப்பட்ட இலாபப் பங்கு வீதம் (கட்டணங்கள் தவிர்ந்த) அல்லது வருடாந்தம் உறுதிப்படுத்தப்பட்ட இலாபப் பங்கு வீதம் (கட்டணங்கள் தவிர்ந்த) என்ற பெறுமதிகளில் கூடிய பெறுமதிக்கு அமைய ஒவ்வொரு வருடமும் உங்களது பிள்ளையின் கல்வி நிதியம் தொடர்ச்சியாக வளர்ச்சியடைவது உறுதிப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு காப்புறுதிதாரருக்கும் ஒதுக்கப்பட்ட தொகைகளை கழித்த பின் ஆரம்ப கொடுப்பனவுகள் சேர்க்கப்படும் முதலீட்டுக் கணக்கொன்று வழங்கப்படுகினறது.

பங்கிலாபம் உங்களது முதலீட்டுக் கணக்கில் சேர்க்கப்படும். அதன்மூலம் உங்களது முதலீட்டுக்கணக்கு இரு வழிகளில் வளர்ச்சியடைவதுடன் அதன்மூலம் அதிகூடிய முதிர்ச்சிப் பெறுமதியை நீங்கள் பெறுவீர்கள். உங்களது முதலீட்டுக் கணக்கிலிருந்து உரிய கட்டணங்கள் அறவிடப்படும்.

# விரிவாக்கம்

2021 ஆம் ஆண்டில் நீங்கள் 30 வயதுடையவராக இருந்து AIA EducationPlan இனை ரூபா 50,000/- வருடாந்த அடிப்படைக் கட்டுபணம் மற்றும் ஆயுள் காப்பீட்டை வருடாந்த அடிப்படை கட்டுப்பணத்தின் 16 மடங்கு என்ற வகையில் பெற்றிருந்தால் 15 வருடங்களின் பின் உங்களது உத்தேசிக்கப்பட்ட முதிர்ச்சி அனுகூலம், ஆயுள் காப்புறுதி அனுகூலம் மற்றும் மொத்த வருடாந்தக் கட்டுப்பணம் என்பன பின்வருமாறு அமைந்திருக்கும்.

| வருடாந்த அடிப்படைக் கட்டுப்பணம் | உத்தேசிக்கப்பட்ட முதிர்ச்சி அனுகூலம் | | |
|---|---|---|---|
| | வருடாந்தம் 4% | வருடாந்தம் 8% | வருடாந்தம் 10% |
| 50,000 | 1,074,238 | 1,433,563 | 1,661,609 |

* காப்புறுதிக் காலத்தில் முறையே குறைந்து செல்கிறது.

அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட முதிர்ச்சி அனுகூலமானது, 4%, 8% மற்றும் 10% என்ற ஊகிக்கப்பட்ட பங்கிலாப வீதம் மற்றும் உரிய கட்டணங்களை கழித்த பின், உரிய திகதிகளில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த ஊகிக்கப்பட்ட பங்கிலாப வீதம் உத்தரவாதமளிக்கப்படாதவை என்பதுடன், அதன்மூலம் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய அதிகபட்ச அல்லது குறைந்தபட்ச தொகை வெளிப்படுத்தப்படவில்லை.

முதிர்ச்சியின் போது திட்டத்தின் அனுகூலப் பெறுமதி முதலீட்டுக் கணக்கின் பெறுமதியாகும்.

| திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அனுகூலம் | தொகை |
|---|---|
| மரணத்தின் போது செலுத்தப்படும் தொகை (அடிப்படைக் காப்புறுதித் தொகை + மேலதிக ஆயுள் காப்புறுதி அனுகூலம்) | ரூபா 800,000 |
| **கட்டுப்பண பாதுகாப்பு அனுகூலம்** முழுமையான இயலாமைக்கு நீங்கள் உள்ளானால் அல்லது மரணம் ஏற்படும் போது எஞ்சியுள்ள கட்டுப்பணங்களை மேற்கொள்ளும் பொறுப்பிலிருந்து நீங்கள் விடுபடுவீர்கள் என்பதுடன், உறுதிப்படுத்தப்பட்ட அனுகூலங்கள் தொடர்ச்சியாக காப்பீட்டு காலப் பகுதியில் பெற வாய்ப்புப் பெறுவீர்கள். | |

அடிப்படை காப்புறுதித் தொகை மற்றும் முதிர்ச்சி அனுகூலம் என்பனவற்றைக் கட்டியெழுப்ப அடிப்படைக் கட்டுப்பணம் பயன்படுத்தப்படுகின்றது. மேலதிக ஆயுள் காப்புறுதி அனுகூலம் மற்றும் கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் என்பனவற்றை உள்ளடக்கிய செலுத்தக்கூடிய வருடாந்த மொத்த கட்டுப்பணம் இலங்கை ரூபா 56,509 ஆகும்.

# திட்டம் சம்பந்தமான ஏனைய தகவல்கள்

நுழைவு வயது: 19 - 61 (அடுத்த பிறந்த திகதியில்)

முதிர்ச்சி பெறும் அதிகபட்ச வயது: 75 வயது

காப்புறுதி தவணை கால எல்லை: 10 - 56 வருடங்கள்

ஆகக்குறைந்த ஆயுள் காப்புறுதி: ரூபா 300,000

**உரிய கட்டணங்கள்**

**ஒதுக்கீட்டு கட்டணம்:**

| காப்புறுதி ஆண்டு | 1வது காப்புறுதி ஆண்டு | 2வது காப்புறுதி ஆண்டு | 3வது காப்புறுதி ஆண்டு தொடக்கம் |
|---|---|---|---|
| அடிப்படை கட்டுப்பணத்திற்கான ஒதுக்கீட்டுக் கட்டணம் | 80% | 45% | 0% |
| மீள்நிரப்பல் (Top Up) கட்டுப்பணத்திற்கான ஒதுக்கீட்டுக் கட்டணம் | 4% (ஒவ்வொரு மீள்நிரப்பல் (Top Up) கட்டுப்பணத்தின் மீதும்) | | |

**கையளிப்பிற்கான கட்டணம்**

| காப்புறுதி ஆண்டு | 1வது காப்புறுதி ஆண்டு | 2வது காப்புறுதி ஆண்டு | 3வது காப்புறுதி ஆண்டு | 4வது காப்புறுதி ஆண்டு தொடக்கம் |
|---|---|---|---|---|
| கையளிப்பிற்கான கட்டணம் | 100% | | | 75-0%* |

* காப்புறுதிக் காலத்தில் முறையே குறைந்து செல்கிறது.

**நிருவாகக் கட்டணம்**

2017 ஆம் ஆண்டில் ரூ. 262.35 ஆக இருப்பதுடன் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து 15% ஆல் அதிகரிக்கிறது.

**நிதிய முகாமைத்துவக் கட்டணம்**

வருடம் ஒன்றுக்கு முதலீட்டுக் கணக்கு பெறுமதியில் 0.75% ஆகும்.

**இறப்பு வீதக் கட்டணம்**

அடிப்படை காப்புறுதித் தொகை மற்றும் நிறுவனத்தின் திட்ட செலவினங்களுக்கு அமைவானது.

**மாதிரிக் கட்டணம்:**

மாதாந்தக் கட்டுப்பண முறைக்கு மாத்திரமே 4% ஏற்புடையது.

# உங்களின் பங்களிப்பு என்ன?

அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள காப்புறுதித் திட்டத்தின் கட்டுப்பணத்தினை செலுத்தும் முழுக் காலப்பகுதியிலும் குறித்த நேரத்தில் கட்டுப்பணத்தினை மேற்கொள்ள வேண்டும். முதல் 3 வருடங்களுக்குள் நீங்கள் உங்களது கட்டுப்பணத்தினை உரியத் தினத்தில் இருந்து 30 நாட்கள் என்ற அனுசரணைக் காலப்பகுதிக்குள் செலுத்தா விட்டால் காப்புறுதி செயழிலந்து விடுவதுடன், இத்திட்டத்தின் கீழ் உங்களுக்கு எந்தவிதமான அனுகூலங்களும் கிடைக்காது. எவ்வாறாயினும், நிபந்தனைகளுக்கு அமைய காப்புறுதித் திட்டத்தை மீண்டும் செயற்படுத்த உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

உங்களது காப்புறுதித் திட்டத்தை 3 வருடமோ அல்லது அதற்கு அதிக காலமோ உரிய காலத்தில் கட்டுப்பணத்தினை செலுத்தி முறையாக அமுலாக்கி வருவதுடன் நீங்கள் கட்டுப்பண கொடுப்பனவை தவறவிட்டிருப்பின், நிறுவனமானது காப்பீட்டு நிர்வாகக் கட்டணம், நிதி முகாமைத்துவ கட்டணம், அடிப்படை காப்பீட்டு தொகைக்கான இறப்புவீத கட்டணம், மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட பாதுகாப்பு அனுகூலங்களுக்கான கட்டணம் மாற்றும் ஏணைய தெரிவு செய்யப்பட்ட ஏணைய அனுகூலங்கள் என்பன உங்களது முதலீட்டுக் கணக்கிலிருந்து அறவீடு செய்து உங்களுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு அனுகூலங்களை வழங்குகிறது. உங்களின் பொருளாதார நெருக்கடிகளின் போதும் உங்களின் முதலீட்டுக் கணக்கில் தேவையான மீதி இருக்கும் பட்சத்தில் காப்பீட்டு அனுகூலங்களை தொடர்ந்தும் அனுபவிப்பீர்கள். மேற்கூறிய கட்டணங்களையும், கட்டுப்பணத்தினையும் முதலீட்டு கணக்கு மீதியில் இருந்து கழிக்க முடியாத பட்சத்தில் காப்பீட்டு உடனடியாகவே செயலிழந்துவிடும். உங்கள் நிதியத்தின் சீரான வளர்ச்சிக்கு உரிய காலத்தில் கட்டுப்பணத்தினை தவறாது செலுத்துவது அவசியமாகும் என்பதை அறியத்தருகிறோம். பாதுகாப்பு அனுகூலங்களை அனுபவிக்கும் அதேவேளை உங்கள் கனவுகளையும் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள இது உதவும். தேவைப்படும் சந்தர்ப்பத்தில் திட்டத்தை பணமாக மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது. எவ்வாறாயினும், இதன்போது திட்டத்தை கையளிப்பிற்கான ஒரு கட்டணம் அறவிடப்படும். கையளிப்பின் பின் காப்புறுதி செயலிழந்துவிடும்.



## மேலதிக அனுகூலங்கள்

### திடீர் விபத்து அனுகூலம்
திடீர் விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்பின் போது மேலதிக ஆயுள் காப்பீடு இதன்மூலம் வழங்கப்படுகிறது. மேலும், நீங்கள் முழுமையான இயலாமைக்கு உள்ளானால், உங்களுக்கு நிதிசார் பாதுகாப்பு வழங்கப்படும். (வழங்கப்படும் நிதி அனுகூலத்தின் பெறுமதி இயலாமையின் பாரிய தன்மையில் தங்கியுள்ளது)

### வைத்தியசாலையில் அனுமதி அனுகூலம்
நீங்கள் மூன்று நாட்களுக்கும் மேல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் தினம் ஒன்றுக்கு (அனுமதித்த தினம் அடங்கலாக) அதிகபட்சம் ரூபா 10,000/- வரை நிதி வழங்கப்படும். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டால் இத்தொகை இரு மடங்காகும். இந்த அனுகூலத்தை உங்களது வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளுக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

### பெரியோருக்கான சத்திர சிகிச்சை அனுகூலம்
உங்களுக்கு அல்லது உங்கள் வாழ்க்கைத்துணைக்கு இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பட்டியலிடப்பட்ட 250 சத்திர சிகிச்சைகளுக்கு இதன்மூலம் நிதிப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

### வைத்தியசாலை செலவின ஆவரணம்
இலங்கையில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஏற்படும் மருத்துவ செவினங்களை மீள்ஈடு செய்து கொள்ள வாய்ப்பு அளிக்கின்றது. (இவ்வனுகூலம் கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலத்தில் உள்ளடக்கப்படவில்லை)

### பாரதூரமான நோய் காப்பீடு
பட்டியலிடப்பட்ட பாரதூரமான 22 நோய்களுக்காக உங்களுக்கும் உங்கள் வாழ்கைத் துணைக்கும் நிதியுதவிகளை பெறலாம். அதிகபட்சமாக ரூ. 3 மில்லியன் வரையிலான காப்பீட்டினை உங்களால் தெரிவு செய்து கொள்ள முடியும்.

### வருமான பாதுகாப்பு அனுகூலம்
எதிர்பாராதவிதமாக நீங்கள் மரணிக்க அல்லது முழுமையான இயலாமை நிலையை அடைந்தால் உங்களில் தங்கியிருப்பவர்களுக்கு கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதியில் அதிகபட்சமாக 10 வருடங்கள் வரை மாதாந்த வருமானம் ஒன்று வழங்கப்படும்.

### வாழ்க்கைத்துணைக்கான ஆயுள்காப்புறுதி
உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் உங்களது காப்புறுதியின் மூலம் ஆயுள் காப்பீடு ஒன்று வழங்கப்படுகின்றது.

### சிறுவர் சுகாதாரக் காப்புறுதி அனுகூலம்
உங்களது பிள்ளைக்கு இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பட்டியலிடப்பட்ட 250 சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி வசதி இதன்மூலம் கிடைக்கின்றது. மேலும், இதன்மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கான கட்டணமும் 12 வயதுக்கு குறைந்த பிள்ளையுடன் பெற்றோரில் ஒருவர் தங்கியிருக்க வேண்டி நேர்ந்தால் அதற்கான விசேட கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படுகின்றது.

காப்புறுதிதாரர் காப்புறுதி உரிமையாளர் அல்லாத சந்தர்ப்பத்தில், இந்த காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்கள் காப்புறுதி உரிமையாளருக்கு வழங்கப்படுவதுடன், காப்பீடுகள் காப்புறுதிதாரருக்கு உரித்துடையதாக இருக்கும்.

இந்த வெளியீடு காப்புறுதித் திட்டம் பற்றிய குறுகிய ஆவணம் ஒன்றாகும். இந்தத் திட்டம் தொடர்பான முழுமையான விபரங்களுக்கு தயவு செய்து காப்புறுதிப் பத்திரத்தைப் பார்க்கவும்.

V9 - 06/22/21

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) இணைல் வெளியிடப்பட்டது. 06/22/2021

HEALTHIER, LONGER,
BETTER LIVES